**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| STC No. | : 291/2025 |
| Name | : Selvi |
| P.W. | : 1 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **02.07.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSSன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் புகார்தாரர் ஆவன். எனது தரப்பில் முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் நான் சொன்னது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை நான் தாக்கல் செய்கிறேன்.

பு.சா.ஆ.1– 01.07.2025 தேதியிட்ட IDBI வங்கி உடுமலை கிளையின் 094369 என்ற எண் கொண்ட ரூ.5,00,000/–க்கான காசோலை,

பு.சா.ஆ.2– 07.07.2025 தேதியிட்ட வங்கி ரிட்டன் மெமோ,

பு.சா.ஆ.3– 12.07.2025 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல்,

பு.சா.ஆ.4– 15.07.2025 தேதியிட்ட எதிரி மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை. வழக்கை அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது. காசோலையை வங்கியில் வசூலுக்கு யார் தாக்கல் செய்தது என்றால் நான் தான் தாக்கல் செய்தேன். காசோலையை வங்கியில் செலுத்தியதற்கான counter foil வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். counter foil நான் தான் பூர்த்தி செய்து கொடுத்தேனா என்றால் ஆமாம். காசோலை என்ன காரணத்திற்காக திருப்பப்பட்டது என்றால் வங்கி கணக்கு மூடப்பட்டது (Account closed) என்று திருப்பப்பட்டது. காசோலையை எத்தனை முறை தாக்கல் செய்தேன் என்றால் ஒரு முறை தாக்கல் செய்தேன். வங்கி ரிட்டன் மெமோவை படித்துப் பார்த்தேன். Account closed என்று திருப்பப்பட்டதற்காக தான் வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தேன் என்றால் ஆமாம். வழக்கறிஞர் அறிவிப்பு 17.07.2025ம் தேதியிட்டு கொடுத்தேன். அந்த அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டார் பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை. எனது வழக்கறிஞருக்கு பதில் அறிவிப்பு எதுவும் எதிரி அனுப்பினாரா என்றால் இல்லை.

(2) எனது கனரா வங்கி கணக்கில் ஆரம்ப காலத்தில் இருந்து நான் தான் நேரடியாக பரிவர்த்தனை செய்து வருகிறேன். திருமணத்திற்கு பின்பு நான் இல்லத்தரசியாக தான் உள்ளேன். எனக்கு வருமான வரி கணக்கு இல்லை. கனரா வங்கி அல்லாமல் வேறு எந்த வங்கியிலும் எனக்கு கணக்கு இல்லை என்றால் முன்பு இருந்தது தற்போது இல்லை. எதிரி ராஜ்குமாரின் சொந்த ஊர் என்ன என்றால் ஞாபகம் இல்லை. எதிரி ராஜ்குமாரின் மனைவி மற்றும் குழந்தைகள் பெயர் தெரியுமா என்றால் தெரியாது ராஜ்குமாரின் கடைக்கு செல்லும் போது அவரின் மனைவியை பார்த்து பேசியுள்ளேன். குழந்தைகள் என்ன படிக்கிறார்கள் என்ற விவரம் தெரியாது. ராஜ்குமாரை சுமார் 10 வருடங்களாக தெரியும். எதிரி ராஜ்குமார் நடத்தி வரும் நிறுவனம் யார் பெயரில் உள்ளது என்றால் அவர் நடத்தி வருவதாக என்னிடம் சொன்னார். யார் பெயரில் உள்ளது என்று நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எதிரி நிறுவனம் நடத்தி வருகிறார் என்று வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி வியாபாரம் எந்த முகவரியில் நடக்கிறது என்றும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

(3) எதிரிக்கு கொடுத்ததாக சொல்லும் ரூ.5,00,000/- எனக்கு எப்படி வந்தது என்று

வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த தொகையை வங்கியில் இருந்து எடுத்து கொடுத்தேனா என்றால் இல்லை. இரண்டு தவணையாக மொத்தம் ரூ.5,00,000/– எதிரிக்கு கொடுத்ததாக சொன்ன சமயத்தில் என்னுடன் யார் இருந்தார்கள் என்று வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். 15.12.2024 ம் தேதி இரண்டாவது தவணை ரூ.2,00,000/– தொகையை பெறும் போது தான் கடனுறுதிச் சீட்டு எழுதிக் கொடுத்தார். கடனுறுதிச் சீட்டில் யார் சாட்சி கையெழுத்து போட்டார்கள் என்றால் தற்போது ஞாபகம் இல்லை. கடனுறுதிச் சீட்டு தற்போது என்னிடம் இல்லை. கடனுறுதிச் சீட்டின் நகலை வழக்கில் தாக்கல் செய்யவில்லை.

(4) நான் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எதிரி எனது வங்கி கணக்கில் வட்டியோ, அசலோ செலுத்தவில்லை என்றால் சரிதான். நான் எதிரிக்கு ரூ.5,00,000/–த்தை வங்கி மூலம் செலுத்தவில்லை. ரூ.5,00,000/– எனக்கு எந்த வகையில் கிடைத்தது என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். காசோலையை கடைசியாக எப்போது பார்த்தேன் என்றால் இன்று நீதிமன்றத்தில் அசலை தாக்கல் செய்யும் போது பார்த்தேன். இன்று தாக்கல் செய்யும் வரை அசல் என்னிடம் தான் இருந்தது என்றால் சரிதான் இணைய வழியாக வழக்கு தாக்கல் செய்ததால் அசல் என்னிடம் இருந்தது. காசோலையில் என்ன நிற மையினால் எழுதப்பட்டிருந்தது என்றால் நீல நிற மையினால் எழுதப்பட்டிருந்தது. ஒரே பேனாவால் எழுதப்பட்டிருந்ததா என்றால் ஆமாம்.

(5) சாட்சியிடம் காசோலை காட்டி கேள்வி கேட்கப்பட்டது – காசோலையில் உள்ள கையெழுத்து மற்றும் மற்ற பகுதிகள் உள்ள மைக்கும் வித்தியாசம் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. காசோலையில் உள்ள தேதி மற்றும் பெயர் யாரால் எழுதப்பட்டது என்றால் அவர் தான் எழுதி கையெழுத்து போட்டு கொடுத்தார். எங்கள் வீட்டில் வைத்து தான் எழுதினாரா என்றால் ஆமாம். காசோலையில் உள்ள எனது பெயர் மற்றும் எழுத்தால் எழுதப்பட்ட வாசகம் எதிரியால் எழுதப்படவில்லை என்றால் சரியல்ல அவர் தான் எழுதிக் கொடுத்தார். காசோலையை எதிரி எனக்கு கொடுக்கவில்லை என்றும் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

(6) Account closed என்ற வங்கி ரிட்டன் மெமோ என்னிடம் கொடுக்கப்படவில்லை

என்றால் சரியல்ல. எனக்கு ஆங்கிலம் படிக்கத் தெரியாது. பு.சா.ஆ.2 வங்கி ரிட்டன் மொமோவில் advice not received என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் Account closed என்று குறிப்பிடவில்லை என்றால் அதைப் பற்றி தெரியாது வங்கியில் கணக்கு மூடப்பட்டதாக தான் சொன்னார்கள். advice not received என்று திருப்பப்பட்ட காசோலையை நான் எதிரிக்கு தகவல் கொடுத்து மீண்டும் வங்கியில் செலுத்த வேண்டும் என்றும் மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின்படி புகார் கொடுக்க இயலாது என்றால் சரியல்ல. ராஜ்குமார் எனக்கு காசோலை கொடுத்திருந்தால் அவர் வங்கிக்கு தகவல் கொடுத்திருப்பார் என்றும், நானே பூர்த்தி செய்து தாக்கல் செய்ததால் தான் advice not received என்று திருப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

(7) காசோலையை வங்கியில் தாக்கல் செய்வதற்கு முன்பு எதிரிக்கு தகவல் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. அவருக்கு நான் தாக்கல் செய்வது தெரியும் என்பதால் நான் தகவல் கொடுக்கவில்லை. எந்த தேதியில் வங்கியில் தாக்கல் செய்ய போகிறேன் என்று எதிரிக்கு தகவல் கொடுத்தேனா என்றால் இல்லை. எதிரிக்கு Account closed என்ற காரணத்திற்காக திருப்பப்பட்டதாக அறிவிப்பு கொடுத்தேன் என்றால் சரிதான். எதிரி பதில் அறிவிப்பு கொடுத்தார் என்றும் அதைப் பற்றி புகாரிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. பதில் அறிவிப்பை பெற்றுக்கொண்டு அஞ்சலக ஒப்புதல் அட்டையில் நான் கையொப்பமிட்டு கொடுத்தேன் என்றால் சரியல்ல என்னிடம் காட்டப்படும் அஞ்சலக ஒப்புகை அட்டையில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. என்னுடைய வழக்கறிஞருக்கு எதிரி பதில் அறிவிப்பு கொடுத்துள்ளார் என்றும் அதை மறைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**தொடர் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.07.02 17:51:40 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்